


**04. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. ஒலிம்பிக் போட்டிகளை வரும் 2036-ம் ஆண்டு இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. கிராமங்களின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் வழிவகை செய்வதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. பொங்கல் பண்டிகையை ஒட்டி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் 3 ஆயிரம் ரூபாய் ரொக்கம் வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

4. நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் அதிகளவில் அரசு பேருந்துகள் இயக்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு. S. S. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

5. பெங்களுருவில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் தகுதிச்சுற்று அரையிறுதியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் இன்று களமிறங்குகிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

ஒலிம்பிக் போட்டிகளை வரும் 2036-ம் ஆண்டு இந்தியாவில் நடத்துவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் முதலாவது மிகப்பெரிய தேசிய வாலிபால் சாம்பியன் போட்டிகளை உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் புதுதில்லியிலிருந்து இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்து பேசியஅவர், விளையாட்டுத்துறையில் நாட்டின் செயல்திறன் படிப்படியாக மேம்பட்டு வருவதாக கூறினார்.

ஒருங்கிணைப்பு, நம்பிக்கை மற்றும் போட்டிகளை எதிர்கொள்வதற்கான தயார் நிலையின் அடிப்படையில் வெற்றி நிர்ணயிக்கப்படுவதாக தெரிவித்த பிரதமர், 24-வது காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் வரும் 2030-ம் ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ளதை சுட்டிக்காட்டினார்.

வரும் 11-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் பல்வேறு மாநிலங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங் சௌஹான்

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான மத்திய அரசின் ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் தொழிலாளர்களின் நலனை பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிப்பதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கிராமங்களின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு இத்திட்டம் வழிவகை செய்வதாக கூறினார்.

2025-26-ம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ஒருலட்சத்து 51 ஆயிரத்து 280 கோடி ரூபாய் நிதி ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித்ஷா திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்றுமாலை திருச்சி வருகிறார்.

திருச்சி மன்னார்புரம் இராணுவ மைதானத்தில் கட்சி சார்பில் நாளை நடைபெறும் பொங்கல் விழாவில் பங்கேற்கவுள்ளார்.

தமிழகத்தில் வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலுக்கான நிலைப்பாடு குறித்தும் கட்சியினருடன் அவர் ஆலோசிப்பார் என தெரிகிறது.

அமைச்சர் வருகையை ஒட்டி திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்றும் நாளையும் ட்ரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பணியில் 12 ஆயிரம் காவல்துறையினர் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

வெனின்சுலா

வெனின்சுலாவில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யப்படும் என மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளால் வெனின்சுலாவில் ஏற்பட்டுள்ள பதட்டங்களை தொடர்ந்து அந்நாட்டிற்கான பயணங்களை தவிர்க்குமாறும் இந்தியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், கராகாசில் உள்ள இந்திய தூதரகத்திடம் தொடர்பில் உள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

இதனிடையே வெனின்சுலா அதிபர் சிறைபிடிக்கப் பட்டதற்கு ரஷ்யா, சீனா, பிரேசில், கியூபா உள்ளிட்ட பல்வேறு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

அந்நாட்டில் இடைக்கால அதிபராக துணை அதிபர் டெல்ஸி ராட்ரி க்யூஸ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

ECI Net

வாக்காளர் சேவைகள் மற்றும் தேர்தல் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளமான ECI Net செயலியை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை பொதுமக்கள் வரும் 10-ம் தேதிவரை சமர்ப்பிக்கலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட இந்த செயலியை இம்மாத இறுதியில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

… … … . MUSIC… …

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக 2025-ம் ஆண்டு மேம்பட்ட நிலையில், வரையறுக்கப்பட்ட தலைவராக பிரதமர் திரு. நரேந்திர மோடியை உலகம் கண்ணோக்கியது குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

… … … . MUSIC… …

இந்தியாவின் தீர்க்கமான பொருளாதார தலைமை தொடங்கி உலகளவில் நம்பிக்கைக்குரிய ஜனநாயக தலைவராக பிரதமர் திரு. நரேந்திரமோடி திகழ்கிறார்.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கைகளின் போதும், வல்லரசுகளின் அழுத்தங்களால் நாட்டின் நலனுக்கு எதிரான வர்த்தக ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படாது என்ற பிரதமரின் நிலைப்பாடு உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது.

சரக்கு சேவைவரி கட்டமைப்பை வலுப்படுத்தியது, 4 புதிய தொழிலாளர் நலச்சட்டங்கள் உள்ளிட்டவை இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்தி மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை 8.2 சதவிகிதம் என்ற உச்சத்திற்கு கொண்டு சென்றது.

தேச பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை என்ற அடிப்படையில் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் எதிரொலியாக ஆபரேஷன் சிந்தூர் பிரதமரின் உறுதியான நிலைப்பாட்டை பறைசாற்றியது.

தேச நலன் மட்டுமல்லாமல் உலகளாவிய நல்லிணக்கத்தின் அடிப்படையிலான, திரு. நரேந்திர மோடியின் செயல்பாடுகள் பார்படாஸ், மொரீஷியஸ், எத்தியோப்பியா, ஓமன் உள்ளிட்ட 29 நாடுகளின் உயர் அங்கீகார கௌவுரவ பட்டங்களை அவருக்கு பெற்றுத்தந்தது.

ஐரோப்பிய தடையற்ற வர்த்தக அமைப்பு மற்றும் நியூசிலாந்து உடனான ஒப்பந்தங்கள், 18 நாடுகளின் நடாளுமன்றங்களில் உரையாற்றிய பெருமை, தெற்கு நோக்கிய கொள்கை உள்ளிட்டவற்றுடன், வருங்காலத்தை வடிவமைப்பத்தில் உலகளவில் மிகப்பெரும் சக்தியாக பிரதமர் திரு. நரேந்திரமோடி திகழ்வது நாட்டிற்கான பெருமை என்றால் மிகையல்ல.

பிரதமர் திரு. நரேந்திரமோடி சர்வதேச அரங்கில் ஆற்றல் மிக்க தலைவராக திகழ்வதாக திருச்சி கிராமாலயா நிறுவனத் தலைவர் பத்ம ஸ்ரீ திரு. எஸ். தாமோதரன் தெரிவிக்கையில்

வாய்ஸ்

……..Music……..

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடும் வகையில் அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருக்கு 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன்மூலம் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 குடும்பத்தினர் பயன்பெறுவர்.

இதற்காக 6 ஆயிரத்து 936 கோடியே 17 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் அரசுக்கு செலவாகும்.

மேலும் பொங்கல் பரிசுத் தொகுப்பில் பச்சரிசி, சர்க்கரை தலா ஒரு கிலோ, ஒரு முழு நீள கரும்பு ஆகியவற்றுடன் வேட்டி சேலைகள் வழங்கப்படவுள்ளதாகவும்,

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாகவே பயனாளிகளுக்கு அனைத்து நியாய விலைக்கடைகள் வாயிலாக இவற்றை வழங்கவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

மடிக்கணினி

தமிழகத்தில் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நாளை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பொறியியல், மருத்துவம், விவசாயம், மற்றும் அரசு கலை அறிவியல் உள்ளிட்ட கல்லூரிகளில் பயிலும் 10 லட்சம் அரசு கல்லூரி மாணாக்கருக்கு முதற்கட்டமாக மடிக்கணினிகள் நாளை வழங்கப்படவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

சிவசங்கர்

நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழகத்தில் அதிகளவில் அரசு பேருந்துகள் இயக்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு. S.S.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சேலம் எடப்பாடியில் 63 புதிய பேருந்து சேவைகளை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், இதுவரை 6 ஆயிரம் புதிய பேருந்துகள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன், தமிழக அரசு அனைத்து துறைகளிலும் பல்வேறு சாதனைகள் படைத்து வருவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தில் இறுதிக்கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாம் இன்று நடைபெறுகிறது.

புதிய வாக்காளர்கள் மற்றும் சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தப் பணிகளில் விடுபட்டவர்கள் இம்முகாமை பயன்படுத்திக் கொள்ளுமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 732 வாக்குச் சாவடிகளில் இன்று நடைபெறும் முகாமை வாக்காளர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. மிருணாளினி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனிடையே இறுதி வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 18-ம் தேதி வெளியிடப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இரங்கல்

முன்னாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க மூத்த தலைவருமான எல்.கணேசன் உடல்நலக்குறைவால் தஞ்சையில் இன்று காலமானார்.

அன்னாருக்கு வயது 92.

அவரது மறைவிற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு. கோவி. செழியன் உள்ளிட்டோர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖❖❖

ராணிப்பேட்டை

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான மத்திய அரசின் ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக ராணிப்பேட்டை மாவட்ட பயனாளி தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

தர்மபுரி வாய்ஸ்

தர்மபுரி மாவட்டத்தில் பொங்கலுக்கான செங்கரும்பு கொள்முதல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பெங்களுருவில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் தகுதிச்சுற்று அரையிறுதியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் – பிரான்ஸின் அர்த்தூர் ரேமண்ட்-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.